**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ஆம் நாள் திங்கட்கிழமை</u>

**<u>இ.ம.எண்.08/2024 இன் அ.வ.எண்.33/2013</u>**

1) பார்வதி (இறந்தார்)

2) பொள்ளாச்சி வட்டம், மகாலிங்கபுரம், ரவுண்டு ரோடு–ல் வசிக்கும் சுமார் 63 வயதுடைய சிங்காரவேலு மனைவி திருமதி.சாந்தகுமாரி.

3) முத்துக்குமார் (இறந்தார்/விடுவிக்கப்பட்டார்)

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) ராஜமாணிக்கம் (இறந்தார்)

2) லட்சுமி (இறந்தார்)

3) R.சுந்தரம் (இறந்தார்)

4) பொள்ளாச்சி தாலூக்கா, ஆனைமலை அஞ்சல், பாரதி நகர், கதவு எண் 6/1F–ல் வசிக்கும் சுமார் 35 வயதுடைய லேட் ராஜமாணிக்கம் மகன் திரு.R.மோகன்ராஜ்.

5) பொள்ளாச்சி தாலூக்கா, ஆனைமலை அஞ்சல், பாரதி நகர், கதவு எண் 6/1F–ல் வசிக்கும் சுமார் 30 வயதுடைய லேட் ராஜமாணிக்கம் மகன் திரு.R.செந்தில்குமார்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், 2–ம் மனுதாரர்/வாதியின் கணவரின் சாட்சியத்தை கோப்பிலிருந்து அகற்றி, 2–ம் மனுதாரர்/வாதியை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18, விதி 3(a) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 02.12.2024

இம்மனுவானது, கடந்த 24.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, 2-ம் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 3 மனுதாரர்கள்/வாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## இறுதி உத்தரவு

1. **முடிவாக,** மனு அனுமதிக்கப்பட்டு, 2-ம் மனுதாரர்/வாதி அசல் வழக்கில் தன்னை சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு. 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒப்பம்/- (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

------------------------------------------------------------

**இறுதிநிலை உத்தரவு**
இ.ம.எண்.8/2024 இன் அ.வ.எண்.33/2013
நாள் : 03.03.2025
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

------------------------------------------------------------